بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

இது வெறும் முன்னறிவிப்பு அல்ல. மகத்தான வானத்தின் அடையாளமாகும். அதனை கண்ணியத்திற்குரியவனும் வல்லமைமிக்கவனுமாகிய இறைவன் நமது நபி கரீம் ரவூஃபுர் ரஹீம் ஆகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மையை வெளிப்படுத்துவதற்காக அனுப்பினான்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 19.02.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

பிப்ரவரி 20 ஆம் தேதி அஹ்மதிய்யா ஜமாஅத்தில் முஸ்லிஹ் மவ்வூது உடைய முன்னறிவிப்பு நாளாக கொண்டாடப்படுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தமது ஒரு மகன் பற்றி நற்செய்தி தெரிவிக்கப்பட்டிருந்தது. அவர் மார்க்கத்தின் சேவகராக இருப்பார். நீண்ட ஆயுளைப் பெறுவார். எண்ணற்ற பிற சிறப்பம்சங்களும் உடையவராக இருப்பார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த முன்னறிவிப்பின் முக்கியத்துவம் குறித்து கூறுகின்றார்கள்: இது வெறும் முன்னறிவிப்பு அல்ல. மகத்தான வானத்தின் அடையாளமாகும். அதனை கண்ணியத்திற்குரியவனும் வல்லமைமிக்கவனுமாகிய இறைவன் நமது நபி கரீம் ரவூஃபுர் ரஹீம் ஆகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மையை வெளிப்படுத்துவதற்காக அனுப்பினான். உண்மையில் இந்த அடையாளம் ஓர் இறந்தவரை உயிரூட்டுவதை விட நூற்றுக்கணக்கான மடங்கு உயர்ந்ததும் முழுமையானதும் நிறைவானதும் ஆகும். ஏனெனில் இறந்தவரை உயிரூட்டுவது என்பதன் தத்துவமாவது, இறை சன்னிதானத்தில் துஆ செய்து ஓர் உயிரை திரும்ப வரவழைப்பதாகும். இதனை நிரூபிப்பதற்கு கூறப்படும் சான்றுகளுக்கு எதிராக விமர்சகர்களின் நிறைய ஆட்சேபனைகள் உள்ளன. ஆனால், இந்த இடத்தில் இறைவனின் அருளாலும் உபகாரத்தாலும் பரக்கத்தாலும் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் துஆவை இறைவன் ஏற்றுக் கொண்டு ஓர் அருளுக்குரிய ரூஹை அனுப்புவதாக வாக்களித்தான். அவரது வெளிப்புற உட்புற பரக்கத்துகள் பூமி முழுவதும் பரவும். எனவே, இந்த அடையாளம் இறந்தவரை உயிர்ப்பிப்பதற்கு சமமான அடையாளமாக இருக்கிறது. ஆனால், சிந்தித்துப் பார்த்தால் இந்த அடையாளம் இறந்தவரை உயிரூட்டுவதை விட நூற்றுக்கணக்கான மடங்கு சிறந்தது.

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்கள் தான் என்று முன்னறிவிப்பின் உண்மையை காலம் நிரூபித்தது. ஆனால், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் தாமே முன் வந்து இந்த முன்னறிவிப்பு என்னைக் குறித்து தான் என்பதை பிரகடனம் செய்யாமல் இருந்தார்கள். நானே முஸ்லிஹ் மவ்வூது என்ற முன்னறிவிப்பை உண்மைப்படுத்துபவன் என்று அறிவிக்கவில்லை. எதுவரையென்றால், அன்னாரது கிலாஃபத்தின் காலத்தில் 30 ஆண்டுகள் கடந்து விட்டன. கடைசியில் 1944 ஆம் ஆண்டில் நான் முஸ்லிஹ் மவ்வூது ஆவேன் என்று பிரகடனம் செய்தார்கள்.

இன்று நான் இது குறித்து முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய குத்பாவிலிருந்து சுருக்கமாக அன்னாரின் வார்த்தைகளிலேயே பொதுவாக சில விஷயங்களைக் கூறுவேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 28 ஜனவரி 1944 –ல் தமது குத்பாவில் கூறுகின்றார்கள்: இன்று நான் கூற விரும்புகிற கருத்து எனது இயல்பின்படி எனக்கு மிகவும் சிரமத்தை ஏற்படுத்தக் கூடிய விஷயமாகும். ஏனெனில் சில இறை வார்த்தைகள் இறை நியதிகள் இதனை விளக்குவதுடன் சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால் இதனை கூறுவதனால் எனது இயல்பில் சிரமம் ஏற்படுத்தினாலும் கூட என்னால் இதனை கூறாமல் இருக்க முடியாது. அன்னார் தாம் கண்ட ஒரு நீண்ட கனவைக் குறிப்பிட்டார்கள். அதற்கு விளக்கம் தந்தவாறு அன்னார் கூறினார்கள். இந்த முன்னறிவிப்பு முஸ்லிஹ் மவ்வூது பற்றியதாகும். இது என்னைக் குறித்தே தீர்மானிக்கப்பட்டதாக இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மக்கள் மீண்டும் மீண்டும் இந்த முன்னறிவிப்பு பற்றிய தங்களது கருத்து என்ன? என்பதை கேட்கிறார்கள். ஆனால், எனது நிலை எப்படி இருந்தது? என்றால் நான் ஒருபோதும் இந்த முன்னறிவிப்பை கருத்தூன்றி படிக்கவும் முயன்றதில்லை. எனது நஃப்ஸ் எனக்கு எந்த ஏமாற்றத்தையும் தந்து விடக் கூடாது. என்னைப் பற்றி நான் யதார்த்த நிலைக்கு மாற்றமாக, கருத்து எதுவும் கொண்டு விடக்கூடாது என்ற எண்ணத்தில் நான் அவ்வாறு செய்தேன். பாருங்கள்! அசல் நபர் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்கிறார்கள். ஆனால், எவரது மூளை புரண்டு விட்டதோ அவர் எந்த அடையாளமுமின்றியே அதனை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இத்தகையோரை பைத்தியம் என்பதைத் தவிர வேறென்ன கூற முடியும்?

எவ்வாறிப்பினும், இந்த முன்னறிவிப்பு குறித்து தமது நாணம், தயக்கம் பற்றி அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஒருமுறை எனக்கு கடிதம் தந்தார்கள். இந்தக் கடிதம் உங்கள் பிறப்பு தொடர்பானது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனை எனக்கு எழுதியுள்ளார்கள். இந்தக் கடிதத்தை தஸ்கிஸல் அஸ்ஹான் –ல் வெளியிடுங்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடமிருந்து மரியாதைக்காக வாங்கி அச்சிட்டு வெளியிடவும் செய்தேன். ஆனால், நான் அப்போதும் கூட ஆழ்ந்து அதனை படிக்கவில்லை. அக்கடிதம் வெளி வந்ததும் மக்கள் பலவிதமான கருத்துக்களைக் கூறி வந்தனர். ஆனால், நான் அமைதியாக இருந்தேன். யாரைப் பற்றி முன்னறிவிக்கப்பட்டதோ அவருக்கு தெரிவிக்கப்பட வேண்டியதும் அவசியமில்லை அல்லது எவரைப் பற்றி முன்னறிவிப்பு

செய்யப்பட்டதோ அவர் அந்த முன்னறிவிப்பை நிறைவேற்றுபவன் நான்தான் என்று அறிவிப்பதும் அவசியமில்லை என்று அவர்களிடம் பதிலளித்து வந்தேன்.

எவ்வாறிருப்பினும், அம்மக்கள் என்னைப் பற்றிய பல்வேறு முன்னறிவிப்புகளை என் முன்னால் வைத்தார்கள். நான் தான் அதனை உண்மைப்படுத்துபவன் என்று கூறுவமாறு வலியுறுத்தினார்கள். ஆனால் நான், எப்போதும் இதனையே கூறி வந்தேன். முன்னறிவிப்பு அதனை நிறைவேற்றுபவரை தானே வெளிப்படுத்துகிறது. இந்த முன்னறிவிப்புகள் என்னைப் பற்றியவை தான் என்றால் நான் தான் அதனை உண்மைப்படுத்துபவன் என்று காலம் தானே கூறும். என்னைப் பற்றியது இல்லை என்றால் காலத்தின் சாட்சி எனக்கு எதிராக இருக்கும். இரு நிலையிலும் நான் எதுவும் கூற வேண்டிய அவசியமில்லை. அது என்னைப் பற்றியது இல்லையெனில் நான் ஏன் பாவியாக வேண்டும்? என்னைப் பற்றி தான் கூறப்பட்டுள்ளது என்றால் நான் அவசரப்பட வேண்டிய அவசியம் இல்லை. இறைவன் தானே உண்மையை வெளிப்படுத்துவான். ஏற்கனவே இல்ஹாமில் கூறப்பட்டது போன்று வரக்கூடியவர் இவரா? அல்லது நாங்கள் இன்னொருவருக்காக காத்திருக்க வேண்டுமா? என்று கேட்டனர். இது இல்ஹாமிய சொற்றொடராகும். இந்தக் கேள்வியை எத்தனை முறை கேட்டனர். இவ்வாறு நீண்ட காலம் கழிந்தது. அந்த நீண்ட காலம் குறித்தும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இல்ஹாமில் தகவல் உள்ளது. உதாரணமாக, ஹஸ்ரத் யாகூப் (அலை) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களுடைய சகோதரர்கள், நீர் (ஹஸ்ரத் யாகூப் நபி) இவ்வாறு யூசுஃப் பற்றியே பேசிக் கொண்டிருந்தால் இறந்து விட்டவர் போல் ஆகி விடுவீர் போலும்! அல்லது இறந்து விடுவீர் போலும்! என்று கூறினர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இதே இல்ஹாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் வந்தது. இவ்வாறு யூசுஃபின் நறுமணம் எனக்கு வருகிறது என்றும் இல்ஹாம் வந்தது. இவையெல்லாம் தெரிவிப்பதாவது, அல்லாஹ்வின் விருப்பத்தின் கீழ் இவ்விஷயம் நீண்ட காலத்திற்குப் பிறகு வெளிப்படும். யூசுஃபும் தனது தந்தையாரை மிக நீண்ட காலம் கழித்தே சந்தித்தார்கள் அல்லது அப்போது தான் அந்த முன்னறிவிப்பு நிறைவேறியது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் இந்த உறுதியில் இருந்தேன். என்னிடம் இந்த முன்னறிவிப்புகள் என்னைக் குறித்து கூறப்பட்டவை தான் என்று வெளிப்படுத்தப்படா விட்டாலும் அதனை நிறைவேற்றுபவன் நான் தான் என்று நிகழ்ந்த சம்பவங்கள் கூறுகின்றன. எனினும் அல்லாஹ் தனது விருப்பத்தின் கீழ் இவ்விஷயத்தை வெளிப்படுத்தியும் விட்டான். அது பற்றி அதாவது முஸ்லிஹ் மவ்வூதுடன் தொடர்புடைய முன்னறிவிப்புகள் என்னைப் பற்றியவையே என்று எனக்கு அறியவும் வைத்தான்.

இவ்வாறு சில முன்னறிவிப்புகள் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். உதாரணமாக, 'அவர் மூன்றை நான்காக்குவார்' என்பது பற்றி எப்போதும் கேள்வி எழுப்பப்படுகிறது. அதுபோன்று 'திங்கட்கிழமை அருளுக்குரிய திங்கட்கிழமை' – இந்த இரு விஷயங்களுக்கும் அன்னார் இவ்வாறு விளக்கமளித்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சிந்தனை மூன்றை நான்காக்குவார் என்பது குறித்து மூன்று குழந்தைகளை நான்காக ஆக்குவார் என்பதாக இருநத்து. அல்லாஹ் எனது சிந்தனையை இவ்வாறும் திருப்பினான். இல்ஹாம் அடிப்படையில் மூன்று மகன்களை நான்காக்குவார் என்று கூறப்படவில்லை. இல்ஹாமில் மூன்றை நான்காக்குவார் என்று மட்டுமே உள்ளது. எனவே, என் கருத்தின் படி நான் பிறந்த வருடம் குறித்து கூறப்பட்டுள்ளது. இந்த முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பு 1886 –ல் நிகழ்ந்தது. மூன்றை நான்காக்குவார் என்ற முன்னறிவிப்பில் கூறப்பட்ட செய்தி என்னவென்றால், இவரது பிறப்பு நான்காம் ஆண்டில் நிகழும் என்பதாகும். அவ்வாறே நிகழ்ந்தது. 'திங்கட்கிழமை அருளுக்குரிய திங்கட்கிழமை' என்று வருகிறது. அதற்கும் பல பொருள்கள் இருக்கலாம். எனது கருத்தின்படி அதற்கு தெளிவான விளக்கமாவது, திங்கட்கிழமை என்பது சனிக்கிழமைக்குப் பிறகு மூன்றாவது நாளாகும். இன்னொருபுறம் ஆன்மீக இயக்கங்களில் நபிமார்கள் மற்றும் அவர்களின் கலீஃபாக்களுக்கு தனித்தனி காலகட்டங்கள் இருக்கின்றன. எவ்வாறு நபிமார்களின் காலம் தன்னளவில் ஒரு தனித்தன்மை வாய்ந்தவையாக இருக்கின்றதோ

அதுபோன்று கலீஃபாக்களின் காலத்திற்கென்று ஒரு தனித்தன்மை இருக்கும். இந்த அடிப்படையில் சிந்தித்துப் பாருங்கள். முதலாவது காலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடையது. இரண்டாவது காலம் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடையது. மூன்றாவது காலம் என்னுடைய என்று அன்னார் கூறுகின்றார்கள். இன்னொருபுறம் அல்லாஹ்வின் இன்னொரு இல்ஹாமின் விளக்கமும் இதனை எடுத்துரைக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இல்ஹாம் வந்தது. 'ஃபஸ்லே உமர்' ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிலிருந்து மூன்றாவது நபராக இருந்தார்கள். எனவே திங்கட்கிழமை அருளுக்குரிய திங்கட்கிழமை என்பதன் பொருள் குறிப்பிட்ட நாள் அல்லது குறிப்பிட்ட ஒரு பரக்கத்திற்குக் காரணமாக இருப்பார் என்பதன்று. மாறாக, இந்த வாக்களிக்கப்பட்டவரின் காலத்தின் உதாரணம் அஹ்மதிய்யத்தின் காலத்தைப் பொருத்தவரை திங்கட்கிழமையாக இருக்கும். அதாவது இக்காலக்கட்டத்தில் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து மார்க்கத் தொண்டிற்காக மக்கள் நிலைநிறுத்தப்படுவார்கள். அவர்களுடள் அவர் மூன்றாவது இடத்தில் இருப்பார். ஃபஸ்லே உமர் என்ற இல்ஹாமிய பெயரிலும் இதே விஷயமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் வார்த்தைகளில் ஃபஸ்லே உமர் என்ற சொல்லானது திங்கட்கிழமை அருளுக்குரிய திங்கட்கிழமை என்பதை விளக்கி விட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த மனிதனும் எனது சுய விருப்பபத்தில் வலுக்கட்டாயமாக இதனை (அதாவது தஹ்ரீகே ஜதீதை) தொடரச் செய்ய முடியும் என்று கூற முடியாது. இதனை 1934 –ல் எத்தகைய நிலையில் தொடங்கப்பட்டது என்றால் அது எனது சக்திக்குட்பட்டதல்ல. அரசாங்கத்தில் ஜமாஅத்திற்கு எதிராக அஹ்ராரிகளின் குழப்பத்தினால் கடும் வழக்கை தொடர திட்டம் தீட்டப்பட்டது. அல்லாஹ் எனது உள்ளத்தில் இத்திட்டத்தை இட்டான் என்று கூறுகிறார்கள். இத்திட்டத்திற்காக முதல் கால கட்டத்தில் பத்து ஆண்டுகள் நிர்ணயம் செய்தேன். ஒவ்வொரு மனிதனும் தியாகம்

செய்யும் போது அதற்குப் பிறகு ஓர் ஈத் உடைய நாள் வருகிறது. இந்த வகையில் ரமலானின் நோன்பிற்குப் பிறகு ஈத் உடைய நாள் வருகிறது. இவ்வாறு எமது பத்தாண்டு கால தஹ்ரீகே ஜதீத் திட்டம் முடிந்திருக்கவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: அடுத்த வருடம் ஈத் உடைய வருடமாக இருக்கும். இவ்வருடம் அதாவது (1944 –ல்) இது முடிவடைகிறது. வியத்தகு விஷயம் என்னவென்றால் 1945 –ல் தஹ்ரீகே ஜதீதின் 11 –வது வருடமாகும். இது ஈதின் வருடமாகும். அந்த வருடமும் ஈதின் நாளில் ஆரம்பமாகிறது. ஈத் உடைய நாள் திங்கட்கிழமை என்று அழைக்கப்படுகிறது. அல்லாஹ் இந்த வார்த்தையில் ஒரு செய்தியைத் தந்துள்ளான். ஒரு காலத்தில் இஸ்லாத்தின் மிகவும் பலவீனமான காலத்தில் அதனைப் பரப்புவதற்காக ஒரு முக்கியமான தப்லீக் அமைப்பின் அடித்தளம் இடப்படும். அதன் முதல் கட்டம் வெற்றிகரமாக நிறைவேறும். அது ஜமாஅத்திற்கு வாழ்த்திற்குரிய காலமாக இருக்கும்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய ஒரு நீண்ட கனவைக் கூறுகின்றார்கள். அதில் தாம் முஸ்லிஹ் மவ்வூது ஆக இருப்பதாக அறிவித்தார்கள். இதுபற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: கனவில் எனது நாவிலிருந்து ஒரு வார்த்தை வெளி வந்தது. அனல் மஸீஹுல் மவ்வூது மஸீலஹு வ கலீஃபதுஹு. இந்த வார்த்தைகள் எனது நாவில் வந்தது வியப்பிற்குரியதாகும். கண்விழித்த பிறகு என்னைப் பற்றியும் இவ்வார்த்தை ஆச்சரியமாக இருக்கிறதே என்று தோன்றியிருக்க வேண்டும். ஆனால் கனவிலேயே ஆச்சரியமான சொற்கள் என் நாவிலிருந்து வருகின்றன என்ற உணர்வு ஏற்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்தக் கனவைக் கேட்டு விட்டு, மஸீஹின் ஆன்மாவாக இருப்பது பற்றிய செய்தியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய 1886 –ம் வருட இல்ஹாமில் கூறப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: கனவிலேயே நான் பார்க்கிறேன். நான் சிலைகளை உடைக்கிறேன். நிறைய சிலைகளை உடைக்கிறேன். இதிலும் கூட இந்த சைக்கினை உள்ளது. அவர் ரூஹுல் ஹக்கின் பரக்கத்தால் பலலை நோயிலிருந்து குணப்படுத்துவார். ரூஹுல் ஹக் என்பது ஏகத்துவத்தின் ஆன்மாவாகும். அன்னார் இஸ்லாத்தின் பிரச்சாரத்தின் அடித்தளத்த இங்கு உலகத்தின் உள்ளத்தை இணை வைப்பிலிருந்து தூய்மையாக்கினார்கள். மூன்றாவது நாள் கனவில் நான் ஓடுவதாகப் பார்க்கிறேன். நான் வேகமாக நடக்கவில்லை. ஓடவே செய்கிறேன். பூமி எனது பாதங்களிலிருந்து நெருங்கிக் கொண்டு செல்கிறது.

முஸ்லிஹ் மவ்வூது உடைய முன்னறிவிப்பில் வருகிறது. அவர் விரைவாக வளருவார். இவ்வாறே நான் கனவில் பார்க்கிறேன். நான் அன்னிய நாட்டிற்குப் போகிறேன். அங்கு எனது பணியை முடிக்கவில்லை. மேற்கொண்டு செல்வதற்கு விரும்புகிறேன். கனவிலேயே கூறுகிறேன். அப்துஷ்ஷுகூரே நான் இதற்கு மேலும் செல்லவா? அல்லது பயணத்திலிருந்து திரும்பவா? நீ தவ்ஹீதை நிலைநாட்டவில்லையா? ஷிர்க்கை அழித்து விட்டயா? இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போதனையை உள்ளங்களில் உறுதிப்படுத்தி விட்டாயா? என்று பார்ப்பேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் அருளிய வார்த்தையிலும் இதே கருத்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அவர் பூமியின் எல்லை வர புகழ் பெறுவார். அதாவது தப்லீகின் பணியை மேற்கொண்டு எடுத்துச் செல்வார். இப்போது நாம் பார்க்கிறோம். இந்த முன்னறிவிப்பும் நிச்சயமாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் காலத்தில் மிக மகத்துவத்துடன் நிறைவேறி விட்டது. இவ்வாறு அன்னாரின் நீண்ட கனவில் கிட்டத்தட்ட முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பின் பல்வேறு கருத்துகள் ஒன்றுபட்டுள்ளன. கனவின் மூலம் அது அன்னாருக்கு பல்வேறு கோணத்தில் காட்டித் தரப்பட்டது. எவ்வாறிருப்பினும், அந்தக் கனவின் அடிப்படையில் விளக்குவதற்குப் பதில் அந்தக் கனவிற்குப் பிறகுள்ள ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முஸ்லிஹ் மவ்வூது பற்றிய சில சம்பவங்கள் முன்னறிவிப்பாக உள்ளன. அவர்களின் காலத்துடன் அவை எவ்வாறு ஒன்றுபடுகின்றன? எவ்வாறு அந்த முன்னறிவிப்பை நிறைவேற்றுகின்றன என்பதை விளக்குவேன்.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தைக் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுடைய அறையில் தொழுகையை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தேன். அந்த அறை மஸ்ஜிதை ஒட்டியிருந்தது. மஸ்ஜிதிலிருந்து உரத்த சப்தம் வந்தது. அவற்றுள் ஒன்று சேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் உடைய குரல் என்று நான் அறிந்து கொண்டேன். அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். ஒரு சிறுவனை முன் நிறுத்தி ஜமாஅத்தை அழிவுக்குக் கொண்டு வரப்படுகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் எவ்வளவு விரைவாக என்னை வளரச் செய்தான் என்றால், எதிரிகள் வியந்து போயினர். ஏனெனில் சில மாதங்கள் முன்னர் இந்த சிறுவன் என்று கூறியவர் சில மாதங்களுக்குப் பிறகு என்னை பெரும் அனுபவசாலி என்றும் தந்திரக்காரர் என்றும் விமர்சித்துப் பேசினார். இவ்வாறு அல்லாஹ் சிறு வயதிலேயே ஜமாஅத்தில் பிளவு ஏற்படுத்துபவர்களுக்கு எனது கைகளால் தோல்வியை வழங்கினான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த முன்னறிவிப்பை எவ்வளவு உறுதியானதாகக் கருதினார்கள் என்றால் அதற்கு தொடக்கத்திலேயே ஒரு மேற்கோளை எடுத்து வைத்தேன். அது வெறும் முன்னறிவிப்பல்ல. அது ஒரு மகத்தான அடையாளமாகும். அந்த மகனின் பிறப்பு முன்னறிவிப்பிற்கேற்ப ஒன்பது ஆண்டுகளில் நிறைவேற இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒன்பது வருட காலத்திற்குள் ஒருவர் தாம் உயிருடன் இருப்போமா என்று கூட தெரியாது. மேலும் அக்காலத்திற்குள் குழந்தை பிறக்கும் என்பதும் தெரியாது. மேலும் அது மகத்தான மகனாகத்தான் இருக்கும் என்பதும் தெரியாது. பிறகு அந்தக் குழந்தை பிறப்பது மட்டுமல்ல. இஸ்லாத்தின் மகிமைக்கும் மகத்துவத்திற்கும் காரணமாக இருப்பார்.

பிறகு அது எத்தகைய காலமாக இருந்தது? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது எதிரிகள் நாலாபுறமும் தாக்குதல் தொடுத்து வந்தனர். இறை கட்டளைப்படி அன்னார் இல்ஹாமின் வாதத்தை எடுத்து வைத்திருந்தார்கள். என்னிடமோ சீர்திருத்தவாதி என்றோ இறைவனால் நியமிக்கப்பட்டவன் என்றோ வாதம் அப்போது இருந்ததில்லை. அந்நிலையில் அல்லாஹ் என்னிடம் உயரிய பண்புகளை உடைய ஒரு மகன் பற்றிய முன்னறிவிப்பை தந்தான் என்றார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருவரது உதவியாளர் பிரபலமடைவார் என்றால் அதன் பொருள் அவரது வழிகாட்டி எஜமானர் பிரபலமடைவார் என்பதாகும். இறைவன் முன்னறிவிப்பில் இவர் பூமியின் விளிம்பு வரை பிரபல்யம் அடைவார் என்றால் அதன் பொருள் அவர் மூலமாக ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) ஆகியோரின் பெயர்கள் பூமியின் எல்லை வரை சென்றடையும். பாருங்கள் முன்னறிவிப்பு எவ்வளவு தெளிவாக உள்ளது? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் ஆப்கானிஸ்தான் எத்தகைய நாடாக இருந்தது என்றால் அங்கு முக்கியமாக இரு ஷஹாதத் நடந்தது. அதன் மூலமாக அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய செய்தி சென்று சேர்ந்திருந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூதை அல்லாஹ் கலீஃபாவாக ஆக்கியதும் இறைவனது அருளால் சுமத்திரா, ஜாவா, சீனாவில் அஹ்மதிய்யத் பரவியது. மொரீஷியஸிலும் ஆப்பிரிக்காவின் பிற நாடுகளிலும் அஹ்மதிய்யத் பரவியது. எகிப்திலும், பாகிஸ்தானிலும், ஈரானிலும் பிற அரபு நாடுகளிலும் ஐரோப்பாவின் பல நாடுகளிலும் அஹ்மதிய்யத் பரவியது.

பிறகு அந்த முன்னறிவிப்பில் இவ்வாறும் செய்தி இருந்தது. அவர் உட்புறமான வெளிப்படையான அறிவுகளால் நிரப்பப்படுவார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் அன்னாரின் முன்னறிவிப்பிற்கேற்ப ஒரு மனிதரை உருவாக்கினான். அவரது வார்த்தைகள் தனக்குள் ரூஹுல் ஹக்கின் பரக்கத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் அல்லாஹ் விரும்பினான். அவர் உட்புற வெளிப்புறமான ஞானங்கள் நிரம்பியவராக இருக்க வேண்டும் என்றும், எதிரிகளின் பண்பாட்டுத் தாக்குதல்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விளக்கங்கள், ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கூறிய விளக்கங்கள் மற்றும் திருக்குர்ஆனின் விருப்பத்திற்கேற்ப அகற்ற வேண்டும் என்றும் விரும்பினான். எனவே, இறைவன் தனது பணியைச் செய்து விட்டான். எனது எழுத்துக்களின் மீது தனது உண்மையின் முத்திரையை இட்டான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இறைவன் கூறாத வரை மௌமாகவே இருந்தேன். இறைவன் என்னிடம் கூறிய போது, கூறியது மட்டுமல்லாமல் மக்களிடம் நான் கூற வேண்டும் என்று வழிகாட்டியதால் நான் இதனைக் கூறினேன். இந்த முன்னறிவிப்பு எல்லா நிலையிலும் என் மூலமாக நிறைவேறியது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு வழிகாட்டல் வழங்கியதால் மட்டும் நான் கூறவில்லை. மாறாக, இறைவன் அத்தகைய சூழ்நிலையை உருவாக்கினான். அவை இந்த முன்னறிவிப்பிற்கு ஆதாரமாக விளங்கின. வானத்தில் நிலவு மின்னும் போது அதனைச் சுற்றி நட்சத்திரங்களையும் மின்னச் செய்கிறான். அதுபோன்று இந்நாட்களில் பலருக்கு கனவும் வந்தது. அவர்களிடம் நான் கண்ட இந்தக் கனவின் கருத்து கூறப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் பலமுறை மறைவான செய்திகளை வெளிப்படுத்தி அதன் உண்மையை வெளிக் கொண்டு வந்தான். முஸ்லிஹ் மவ்வூது இறைவனது ரூஹுல் ஹக்கினால் சிறப்பிக்கப்படுவார் என்ற உண்மையை வெளிக் கொண்டு வந்தான். அல்லாஹ் உடைய அடையாளங்களை அவரிடம் வெளிப்படுத்தினான். முதலிலேயே இந்த முன்னறிவிப்புகளை தாமே உண்மைப்படுத்துபவர் என்று கூறி வந்திருக்கலாமே? நான் இப்போது தான் அதனை உணமையாக்குபவன் என்று கூறுகிறேன். அதில் என்ன ஹிக்மத் உள்ளது? என்று மக்கள் கூறுகின்றார்கள். நான் கூறுகிறேன். அதன் ஹிக்மத் இதுதான். திருக்குர்ஆன் கூறுகிறது. மகானல்லாஹு லியுளிஅ ஈமானுக்கும் – நபியின் தோற்றத்திற்குப் பிறகு அவருக்கு மரணத்தை தந்த பிறகு மீண்டும் அவரால் உருவாக்கப்பட்ட ஜமாஅத் இறை மறுப்பிற்கு இரையாவதையும் அவர்களது ஈமான் அழிவதையும் விரும்புவதில்லை. மஸீஹ் மவ்வூது உருவாக்கிய ஜமாஅத்தில் அன்னாரின் வாழ்விலேயே முஸ்லிஹ் மவ்வூது வரவேண்டியிருந்தது. அதாவது அவர் சஹாபாக்களின் காலத்தில் வர வேண்டியிருந்தது. இதனால் இறைவன் இவ்வாறு திட்டமிட்டான். முதலில் அவரை ஜமாஅத்தின் கலீஃபாவாக ஆக்கினான். அவரிடம் கட்டுப்படுவதற்காக ஜமாஅத்திடம் வாக்குறுதி வாங்கினான். பிறகு அவரைப் பற்றி கூறப்பட்ட முன்னறிவிப்பை நிறைவேற்றுவதற்கான ஏற்பாட்டினை செய்தான்.

இவ்வாறு உண்மை நிலை பட்டப்பகல் போன்று ஜமாஅத்தின் முன் வெளிப்பட்டதும் அந்த கலீஃபத்துல் மஸீஹ் ஆகப் போகிற அல்லது முஸ்லிஹ் மவ்வூது ஆகப் போகிறவருக்கு இந்த உண்மையினை வானத்திலிருந்து அறிவை வழங்கினான். இதன் மூலம் வானம் மற்றும் பூமி இரண்டின் சாட்சியமும் ஒன்றிணைவதற்காக அவ்வாறு செய்தான். இவ்வாறு முஃமீன்களின் ஜமாஅத் குஃப்ர் என்று கறையிலிருந்து காக்கப்படுவதற்காக அவ்வாறு செய்தான்.

அல்லாஹ் இக்காலத்திலும் எல்லாரது ஈமானையும் பாதுகாப்பாக வைப்பானாக! நிராகரிப்பு மறுப்பு என்ற கறைகளிலிருந்து பாதுகாப்பானாக! ஜமாஅத் அன்பர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது உடைய நூல்களிலிருந்து அதிகம் பயனடைய வேண்டும். உருதுவிலும் பிற மொழிகளிலும் அன்னாரின் படைப்புகளை படிக்க வேண்டும். அல்லாஹ் அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! இறுதியாக ஹுஸூர் அவர்கள் கண்ணியத்திற்குரிய அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் மகனான கண்ணியத்திற்குரிய சூஃபி நஸீர் அஹ்மது சாஹிப் அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 19.02.2016
Tamil Translation : Muallim. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516